# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

Sessions .. .. Sessions Case No. 103 of 2021

Deposition of witness for: Prosecution PW8
Defence
Court

Name : மதனகோபால்
Father Name : காசிராஜன்
Village :விருதுநகர்
Taluk :விருதுநகர்
Caste :
Calling :
Religion :
Age :65

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of March 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை -**

நான் தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன். நான் அஞ்சலக துறையில் வேலை பார்த்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். அ.சா.1 எனது உறவினர். எதிரியை எனக்கு தெரியாது. எனது அத்தை மகன் மாரியப்பன் என்பவர் சாத்துூர் அருகே உள்ள தீப்பெட்டி தொழிற்சாலையில் வேலை பார்த்தார். அங்கு விபத்து ஏற்பட்டு மாரியப்பன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அவரை சிகிச்சைக்காக மதுரையில் உள்ள ஒரு மருத்துவமனையில் ஒருநாள் வைத்திருந்தனர். மறுநாள் இறந்துவிட்டதாக சொன்னார்கள். உறவினர் என்ற முறையில் அவரது இறுதிசடங்கிற்கு நான் சென்றேன். அ.சா.1 பார்வதிக்கு படிப்பறிவு இல்லாததால் அவருடன் காவல்நிலையத்திற்கு வருமாறு என்னை அழைத்தார். நான் அ.சா.1 உடன் விருதுநகர் பஜார் காவல்நிலையம் சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை நான் தான் எழுதினேன். அங்கு உள்ள போலிசார் சொல்ல சொல்ல புகார் மனு எழுதினேன். அ.சா.1 எதுவும்

சொல்லவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை )**

கடந்த 03.01.2013ம் தேதி மாலை 5.30 மணியளவில் அம்மன் தீப்பெட்டி ஆலையில் எனது உறவினர் மாரியப்பன் என்பவர் அங்கு வேலை பார்த்ததாகவும், தீப்பெட்டி கழிவு குச்சிகளை இழுத்து தூக்கும் போது உராய்வு ஏற்பட்டு, தீ விபத்து ஏற்பட்டு உடலின் முன்பக்கம் முழுவதும் தீக்காயம் ஏற்பட்டதாகவும், மேற்படி விபத்திற்கு கம்பெனி வெல்பர் ஆபிசர் ரவிக்குமார் மற்றும் ஆஜர் எதிரி தான் காரணம் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு 04.01.2013ம் தேதி மதியம் 1.15 மணிக்கு நானும், அ.சா.1 பார்வதி இருவரும் பஜார் காவல்நிலையம் சென்றோம் என்றும், அங்கு நடந்த விபரத்தை அ.சா.1 சொல்ல சொல்ல நான் தான் புகார் மனு எழுதினேன் என்றும், புகார் மனு எழுதி அதில் அ.சா.1 கையொப்பம் செய்துவிட்டும் இது சம்மந்தமாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றுவதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – **இல்லை.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 103 of 2021

Deposition of witness for { Prosecution PW9
Defence
Court

Name : சோலையப்பன்
Father Name : பாண்டியன்
Village :ஓ.கோவில்பட்டி
Taluk :விருதுநகர்
Caste :
Calling :
Religion :
Age :43

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of March 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை -**

நான் தற்போது ஓ.கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் அயனிங் கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 03.01.2013 ம் தேதி நான் அம்மன் தீப்பெட்டி ஆலையில் டெக்னிசியன் வேலை பார்த்தேன். அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் தீடீரென்று சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்த போது அந்த இடம் புகை மண்டலமாக இருந்தது. வேறு யாரும் காயம்பட்டு கிடந்தார்களா என்று எனக்கு தெரியாது. மாரியப்பன் என்பவருக்கு காயம் ஏற்பட்டதாகவும் அவரை மருத்துவமனை அழைத்து சென்றதாகவும் மறுநாள் அவர் இறந்து விட்டதாகவும் தகவல் சொன்னார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 103 of 2021

Deposition of witness for { Prosecution PW10
Defence
Court

Name : செல்வன்
Father Name : வேலு
Village :கள்ளிக்குடி
Taluk :கள்ளிக்குடி
Caste :
Calling :
Religion :
Age :50

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of March 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை -**

நான் தற்போது கள்ளிக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது சென்னையில் எ.பி.ஜே கொரியர் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 03.01.2013 ம் தேதி நான் அம்மன் தீப்பெட்டி ஆலையில் பிட்டராக வேலை பார்த்தேன். அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் டமார் என்று சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்த போது கூட்டமாக இருந்தது. மாரியப்பன் என்பவருக்கு காயம் ஏற்பட்டிருந்தது. மேற்படி விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது. காயம் ஏற்பட்ட மாரியப்பனை மருத்துவமனை அழைத்து சென்றனர். மறுநாள் அவர் இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 103 of 2021

Deposition of witness for { Prosecution PW11
Defence
Court

Name : சரவணக்குமார்
Father Name : கந்தசாமி
Village :சென்னம்பட்டி
Taluk :கள்ளிக்குடி
Caste :
Calling :
Religion :
Age :47

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of March 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை -**

நான் தற்போது சென்னம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது பிசிண்டி அருகே உள்ள யுவராஜ் பட்டாசு ஆலையில் பசை தயார் செய்யும் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். நான் சம்பவதன்று அம்மன் தீப்பெட்டி ஆலையில் வேலை பார்த்தேன். கடந்த 2013ம் வருடம் மாலை 6.00 மணியளவில் விருதுநகர் பஜார் போலிசார் வந்தார்கள். என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்து போட்டேன். பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.5** ஆகும். என்னுடன் ராமநாதன் என்பவர் கையொப்பம் செய்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.